# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்தசெயல் நிறைவேற்றுகை
# Annual Performance Report
# 2015

නීතිය හා සාමය සහ දක්ෂිණ සංවර්ධන අමාත්‍යාංශය

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்திஅமைச்சு

Ministry of Law & Order and Southern Development

# வருடாந்தவினைத்திறன் அறிக்கை

# 2015

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்குஅபிவிருத்திஅமைச்சு

13வது மாடி,செத்சிறிபாய,படிமுறை II

பத்தரமுல்ல.

# உள்ளடக்கம்

**பக்கஎண்**


| | |
|---|---|
| 01. அறிமுகம் | 01- 05 |
| தொலைநோக்கு | 03 |
| செயற்பணி | 03 |
| நோக்கங்கள | 04 |
| அமைச்சின் பணியாளர்கள | 05 |
| 02. அமைச்சின் ஒட்டுமொத்த வினைத்திறன் | 06-20 |
| 2.1. நாட்டின் சாதாரண மக்களது வாழ்க்கையில் வெற்றிக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் சில | 06-11 |
| 2.2.முறையான பொலிஸ் சேவையின் பொருட்டு அமைசசினூடாக மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள | 12-13 |
| 2.3. அமைசச் ினதும் அமைசச் ின ் கீழ் இயங்கும் நிறுவனங்களின் முன்னேற்றத்தினை அடையும் பொருட்டு | 14-15 |
| 2.4. மேற்பார்வை செய்யப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டஙக்ளின் வினைத்திறன் | 16-18 |
| 2.5. மீளாய்வு வருடத்தினுள் விடயப்பரபபிற்குள் அடங்காத நிறுவனங்களின் செயற்பாட்டு முன்னேற்றம் | 19-20 |
| 03. பிரிவு ரீதியான செயற்பாட் டுவினைத்திறன் | 21-33 |
| 3.1. நிர்வாகப் பிரிவு | 21-23 |
| 3.2. பொலிஸ் பிரிவு | 24-25 |
| 3.3. நிதிப்பிரிவு | 26-29 |
| 3.4. திட்டமிடல் மற்றும் மேற்பார்வைப் பிரவு | 30-31 |
| 3.5. உள்ளககணக்காய்வுப் பிரிவு | 32-33 |


# எண்ணிக்கை அட்டவணை விபரங்கள்


| அட்டவணை இலக்கம் பெயர் | பக்கஎண் |
|---|---|
| 01. 2015.12.31 ஆம் திகதிக்கு அமைச்சரவையின் ஆளனிவிபரம் | 05 |
| 02. குற்றச்செயல்கள் வகைகளின் அடிப்படையில் பதிவாகியவையும் முன்னேற்றமும் | 06 |
| 03. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குஎதிரானகுற்றங்கள் பதிவாகியவையும் தீர்க்கப்பட்டவையும் | 07 |
| 04. வாகன விபத்துக்கள் | 08 |
| 05. போதைவஸ்த்துக்கள் | 08 |
| 06. போதை வஸ்த்துக்கள் கைப்பற்றப்பட்டஅளவுகள் | 09 |
| 07. ஊழல் மற்றும் சட்டவாக்ககுற்றங்கள் | 09 |

08. விசேட அதிரடிப்படை மேற்கொண்ட ஏனைய சுற்றி வளைப்புக்கள் 10
09. பொதுமக்கள் குறைகள் முறையூடாககிடைக்கப்பெற்றவையும்
தீர்க்கப்பட்டவைகளினதும் எண்ணிக்கை 11
10. ஆளணி மாற்றங்கள் - 2015 21
11. உள்நாட்டுப் பயிற்சிகள் 22
12. வெளிநாட்டுப் பயிற்சிகள் 23
13. நிதிஒதுக்கீடுகள் மற்றும் பயன்படுத்தல்கள் - 2015 26
14. அரசஅதிகாரிகளின் முற்பணம் ‘‘பி’’நிதிகணக்கு 27

# 01. அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் விடயமாக அமைவது அன் நாட்டில் நிலவுகின்ற அமைதியான சூழலாகும். அமைதியான ஒரு நாட்டில் நீடுறுதியான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான முக்கியமான ஒரு காரணியாக அமைவது சம நிலையான அபிவிருத்தி செயற்பாடாகும். சுதந்திரமானதும், அமைதியானதுமான சூழலொன்றை உருவாக்கும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு 2013.08.16ஆம் திகதிய 1823/70ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியினூடாக உருவாக்கப்ட்ட சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புடையதாக இருக்கின்ற அதேவேளை இதற்குரியதான விடையப்பரப்பை உள்ளடக்கியதாக தமது கடமைகளை மேற்கொண்டது.

அமைதியான ஒரு நாட்டில் சமநிலையான அபிவிருத்தி பாதையில் பயணிக்கும் அபிலாசையே அடைந்து கொள்ளும் பொருட்டு “**மைத்திரி ஆட்சி – நிலையான நாடு**” எண்ணக்கருவை முன்நிலைப்படுத்தியதாக 2015.01.18 திகதிய 1897/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக இவ் அமைச்சின் இடர் முகாமைத்துவ மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு என்று உருவாக்கப்பட்டது. அதற்கு பின்னர் இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், கிறிஸ்தவ மத அலுவலக திணைக்களம் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை என்பனவையும் விடயப்பரப்பிற்கு உள்ளடக்கப்பட்டு 2015.03.09ஆம் திகதிய 1905/4 ஆம் இலக்க விசேட வர்த்தமானியினூடாக அமைச்சின் கடமைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு மக்கள் சமாதானம் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு என அமைக்கப்பட்டது. அதன் பின்னர் 2015.09.21ஆம் திகதி 1933/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக சட்டம், ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் புணரமைப்பு அமைச்சாக அமைச்சின் கடமைகள் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டதோடு இலங்கைப் பொலிஸ், விசேட அதிரடிப்படை,சிறைச்சாலைகள் திணைக்களம். அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசியச் சபை, சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் மற்றும் இளந் தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலை ஆகிய நிறுவனங்கள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன்படி செயற்பட்டு, எமது தாய் நாட்டின் மக்கள் சமாதானத்தை பாதுகாப்பதனூடாக அமைதியான சூழல் ஒன்றை உருவாக்குவதும், தென் பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக தோல் கொடுத்தும் நாட்டின் சமநிலையான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் கடமையை முன்நிலைப்படுத்தியதாக 2015.11.24ஆம் திகதிய 1942/10ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு உருவாக்கப்பட்டது.

அதன் படி இலங்கையில் நீடுறுதியான அபிவிருத்தியின் பொறுட்டு பிரதேச அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதும் சட்டத்தை மதிக்கும், நற்குணங்களையுடைய பிரஜைகளைக் கொண்ட சமூகம் ஒன்றை உருவாக்கும் பொருட்டு இவ் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விசேடமானதுமான கடமைகள் பலவாகும். அதற்கென இலங்கைப் பொலிஸ், விசேட அதிரடிப்படை, சிறைச்சாலைகள் தினைக்களம். அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசியச் சபை, காலி மரபுரிமை மன்றம் ஆகிய நிறுவனங்களுக்கான கொள்கைகளைத் தயாரித்தல், வழிகாட்டல், செயற்பாட்டு மேற்பார்வை,வினைத்திறனான மதிப்பீடு மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து கடமைகளையும் மேற்கொண்டவாறு அமைச்சின் கடமைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

## வழிகாட்டலை உறுதிப்படுத்தியதாக.....

“புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நீதித்துறை, பொலிஸ், தேர்தல், கணக்காய்வு, சட்டமா அதிபர் ஆகிய நிறுவனங்களின் பக்கச்சார்பின்மையை பாதுகாப்பதற்காக சுயாதீன ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படும்”

“அரச சேவை, அரசாங்கத்தின் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படுவதனையும் நடுநிலையாக செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அரச சேவையையும் பொலிஸ் துறையையும் அரசியல்மயமாக்கப்படாத ஆற்றல் அடிப்படையை அறிமுகம் செய்வேன்”

“சகல அந்தஸ்த்துக்களைச் சார்ந்த நபர்களின் மோசமான நடவடிக்கைகள் காரணமாக உள்நாட்டில் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அதிகரித்து காணப்படுகின்ற சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு உச்சகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அது தொடர்பான வழக்கு விசாரணைகளை மிகக் குறுகிய காலத்தினுள் முடிவுறுத்துவதற்கு அவசியமான வசதிகளை பெற்றுக் கொடுப்பேன். அதன் மூலம் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்”

(மைத்ரி ஆட்சி... நிலையான நாடு கொள்கைப்பிரகடனம் - பக்கம் 16)

“போதைவஸ்து வியாபாரிகளை ஒடுக்குவதற்கு தேசிய புலனாய்வுச் சேவை, விசேட அதிரடிப்படை, இலங்கைச் சுங்கம், அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை என்பவற்றை ஒருங்கிணைத்து விசேட செயலணி ஒன்றைத் ஸ்தாபிப்பேன்”

“போதைவஸ்த்துக்களுக்கு அடிமையாகியோரை விடுவிப்பதற்கு விசேட புனர்வாழ்வு நிலையங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பேன்”

(மைத்ரி ஆட்சி... நிலையான நாடு கொள்கைப்பிரகடனம் - பக்கம் 24/25)

## தொலைநோக்கு

“ஒழுக்கநெறிமிக்க நாட்டையும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தையும் கட்டியெழுப்பும் முன்னோடியாதல் மற்றும் தெற்கு அபிவிருத்தியின் முதன்மை வழிகாட்டியாதல்”

## செயற்பணி

“சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல், பயங்கரவாதத்தை ஒழித்தல், வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு, அபாயகரமான ஔடதங்கள் பாவனையைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் ஊடாக நாட்டில் அமைதியான சூழலை நடாத்திச் செல்லல் மற்றும் தெற்குப் பிரதேசத்தில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை நீடுறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்துவதன் மூலம் தெற்குப் பிரஜைகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல்”

# நோக்கங்கள்

- ஒவ்வொரு பிரஜையும் பயமும் சந்தேகமும் இன்றி வாழக்கூடிய அமைதியான சூழல் ஒன்றை நடைமுறைப்படுத்தி செல்லும் பொருட்டு சமத்துவமானதும் நியாயமானதுமான வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- பல்வேறு வகையான குற்றங்கள், சமூக விரோத செயற்பாடுகள், வன்முறைகளை தவிர்ப்பதற்கும், தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பல்வேறு வகையான குற்றங்கள், சமூகவிரோத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகள் மேற்கொள்ளும் நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதனூடாக சமூகக் குற்றங்கள் பற்றிய பயத்தை இல்லாது செய்தல்.
- போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் வாகனங்களை கட்டுப்படுத்துதல்.
- அபாயகரமான ஔடத பாவனை, பரிவர்த்தனையை தடுத்தல் மற்றும் பயன்படுத்துவோரை புனர்வாழ்வுக்கு உற்படுத்தி சமூகமயப்படுத்தல்.
- தெற்கு பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்காக மேலதிக வருமான மார்க்கங்களை உருவாக்கும் செயற்பாடுகளை உருவாக்குதல்.
- தெற்கு பிரதேசத்தில் ஆகக் குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படும் வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- விமான நிலையம், துறைமுகம் தொடர்பிலான கைத்தொழில் மற்றும் நடப்புச்சேவைகளை முன்னேற்றுவதற்காக பொருளாதார அலகுகளை ஏற்படுத்தல்.
- தெற்கு பிரதேசத்தில் சுற்றுலா மனங்கவர் வலயங்கள் தொடர்பான வசதிகள், கைத்தொழில் மற்றும் சுற்றுலா சேவைகளை முன்னேற்றுதல்.
- தெற்குப் பிரதேசத்தில் காணப்படும் தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார பெறுமதிவாய்ந்த இடங்களை முறையாக பராமரித்தல்

# அமைச்சின் பணியாளர்கள்

## 2015.12.31 ஆம் திகதியில்அமைச்சின் பணியாளர்கள்

**எண்ணிக்கை அட்டவனை - 01**

| தொ. இல. | பதவி | சேவை | வகுப்பு | சம்பள அளவு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | | 2015.12.31 ஆம் திகதியில் வேவையில் உள்ளோரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிலையான | தற்காலிக | ஒப்பந்த | நிலையான | தற்காலிக | ஒப்பந்த |
| 1 | செயலாளர் | - | - | SL -2006 | 01 | | | 01 | | |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே | Sp | SL 3-2006 | 02 | | | 01 | | |
| 3 | பிரதம நிதி உத்தியோகத்தர் | இ.க.சே | SP | SL 3-2006 | 01 | | | 01 | | |
| 4 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே | I | SL 1-2006 | 03 | | | 03 | | |
| 5 | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 6 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 7 | உதவிப்/பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | II/III | SL 1-2006 | 01 | | | 01 | | |
| 8 | உதவிச் செயலாளர் | இ.நி.சே | II/III | SL 1-2006 | 03 | | | 01 | | |
| 9 | கணக்காய்வாளர் | இ.க.சே | II/III | SL 1-2006 | 02 | | | 01 | | |
| 10 | சட்ட உத்தியோகத்தர் | திணைக்களமயமாக்கப்பட்ட | II/III | | 01 | | | | | |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | Supra | MN 7-2006 A | 01 | | | | | 01 |
| 12 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்) | மொ.பெ.சே | I/II | MN 6-2006A | 01 | | | | | |
| 13 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் - ஆங்கிளம்) | மொ.பெ.சே | Spe, I | MN 6-2006A | 01 | | | | | |
| 14 | இணைப்புச் செயலாளர் - செயலாளர் | தற்காலிக | - | - | | 01 | | | 01 | |
| 15 | தகவல் தொலைத்தொடர்பு தொழிநுட்ப உத்தியோகத்தர் | த.தொ.தொ.சே | Class II Grade II | MN 6-2006A | 01 | | | | | |
| 16 | புள்ளிவிபர உத்தியோகத்தர் | | I/II | | 01 | | | | | |
| 17 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சே | III,II,I | MN 4-2006 A | 24 | | | 13 | | |
| 18 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | III,II,I | MN 2-2006 A | 40 | | | 33 | | 01 |
| 19 | சாரதி | சா.சே | III,II,I | PL3-2006 | 15 | | | 12 | | |
| 20 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே | III,II,I, | PL1-2006 | 18 | | | 16 | 01 | 02 |
| மொத்தம் | | | | | 118 | 01 | | 85 | 02 | 04 |

*தகவல் - அமைச்சின் நிர்வாகப் பிரிவு*

# 02.அமைச்சின் ஒட்டுமொத்த வினைத்திறன்

## 2.1. நாட்டின் சாதாரண மக்களது வாழ்க்கையில் வெற்றிக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் சில......

### 2.1.1. நாட்டில் பதிவாகும் குற்றச்செயல்களை விரைவாக தீர்ப்பதற்கு அவசியமான கொள்கைரீதியான மற்றும் உபாயமார்க்க வழிகாட்டல்களை பெற்றுக்கொடுத்தல்

எண்ணிக்கை அட்டவனை இலக்கம்02இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டில் பதிவாகிய 1,172,793 ஆக இருந்த குற்றச் செயல்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு 1,180,805, ஆக அதிகரித்து காணப்பட்ட அதேவேளை அவ் எண்ணிக்கை மீளாய்வு வருடத்தினுள் 1,129,555 ஆக குறைவடைந்தமையானது அமைச்சின் மூலமாக இலங்கை பொலிசிற்கும் விசேட அதிரடிப்படைக்கும் பெற்றுக் கொடுத்த வழிகாட்டல்களின் சிறந்த பிரதிபலன்களாகும்.

**குற்றச்செயல்கள் வகைகளின் அடிப்படையில் பதிவாகியவையும் தீர்க்கப்பட்டவையின் முன்னேற்றமும்**

**எண்ணிக்கை அட்டவனை - 02**

| குற்றங்களின் வகைகள் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவாகிய | தீர்த்தல் முன்னேற்றம் | பதிவாகிய | தீர்த்தல் முன்னேற்றம | பதிவாகிய | தீர்த்தல் முன்னேற்ற ம |
| சிறுவர் குற்றங்கள் | 55,349 | 32,791 | 50,962 | 29,396 | 188,40 | 049,13 |
| சிறு குற்றங்கள் நபர்களுக்கு எதிராக | 45,282 | 33,094 | 42,368 | 30,561 | 870,43 | 292,30 |
| சிறு குற்றங்கள் சொத்துக்களுக்கு எதிராக | 26,138 | 15,703 | 21,827 | 11,691 | 685,30 | 407,14 |
| சிறு முறைப்பாடுகள் | 1,046,024 | 1,044,465 | 1,065,648 | 1,063,413 | 812,014,1 | 291,014,1 |
| மொத்தம் | **1,172,793** | **1,126,053** | **1,180,805** | **1,135,061** | **1,129,555** | **1,072,039** |
| சதவிகிதம் | | **96%** | | **96%** | | **95%** |

***தகவல் - இலங்கைப் பொலிஸ்***

சிறுவர் குற்றங்களின் தீர்ப்புகள் தொடர்பான முன்னேற்றமாக கருதப்படுவது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எண்ணிக்கையே என்பதுடன் சிறு குற்றங்கள் மற்றும் சிறு முறைப்பாடுகளின் போது இலங்கை பொலிஸ் ஊடாகவோ அல்லது இணக்கச் சபைக்கு முன்வைத்ததன் மூலமோ அல்லது வழக்கு தாக்கல் செய்வதன் மூலமாகவோ தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கையினை முன்னேற்றமாக குறிப்பிட முடியும். அது 2013ஆம் ஆண்டிலும் 2014 ஆம் ஆண்டிலும் 96%ஆக இருந்ததோடு 2015ஆம் ஆண்டில் அதன் அளவு 95% வரை 1%ஆல் குறைந்தாலும் அதனையும் சிறந்தவொரு சதவிகிதமாகக் கருத முடியும்.

## 2.1.2. பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இடம்பெறும் குற்றங்களை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் அவற்றுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையைப் போலவே பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் அவற்றுக்காக வழங்கப்பட்ட தீர்வுகளின் விகிதம் தொடர்பாக நோக்குமிடத்து 2013 ஆம் ஆண்டில் 47%ஆக இருந்த தீர்வு வழங்கள் விகிதாசாரமானது 2014ஆம் ஆண்டில் 42% வரையில் குறைவடைந்து இருப்பதனை காண முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அமைச்சினூடாக உரிய நிறுவனங்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்ததன் காரணமாக 2015 ஆம் ஆண்டில் அது 68% வரை வளர்ச்சியடைந்து இருப்பதனை கீழே வரும் அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் பதிவாகியவையும் தீர்க்கப்பட்டவையும்**

**எண்ணிக்கை அட்டவனை - 03**

| குற்றங்களின் வகைகள் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட |
| **சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள்** | 040,6 | 109,2 | 868,5 | 648,1 | 5,911 | 5,102 |
| **பெண்களுக்கு எதிரான குற்றங்கள்** | 320,8 | 672,4 | 434,8 | 399,4 | 8,288 | 4,579 |
| **மொத்தம்** | **360,14** | **781,6** | **302,14** | **047,6** | **14,199** | **9,681** |
| **சதவிகிதம்** | | **47%** | | **42%** | | **68%** |

***தகவல் - இலங்கைப் பொலிஸ்***

## 2.1.3. மக்களது வாழ்க்கை மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விதமாக வாகனப் போக்குவரத்தினை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்களை தெளிவுபடுத்தும் இணைக்கப்பாட்டுள்ள அட்டவணை 04இன் படி, நாட்டில் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வானங்களின் எண்ணிக்கையானது மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்ற சூழ்நிலையில் அதற்கு சமமானதாக வாகன விபத்துக்களின் அளவும் அதிகரிக்கின்ற நிலைமையானது இவ்வாறு கட்டுப்பாட்டில் இருப்பதற்கான காரணம் அதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் என்றே கூற வேண்டும். வாகன விபத்துக்களுடன் தொடர்புடைய நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தல், தண்டப் பத்திரம் வழங்கள் ஆகியவற்றுடன் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் அவசியமான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டமை ஆகியன நேரடியான தாக்கம் செலுத்தியுள்ளதனை உறுதிப்படுத்தியுள்ளன.

**வாகன விபத்துக்கள்**

**எண்ணிக்கை அட்டவனை - 04**

| வருடம் | பயங்கர விபத்துகள் | பாரிய விபத்துகள் | சிறு காயங்கள் | நஷ்டஈடு விபத்துகள் | மொத்த விபத்துகள் | வாகனங்களின் எண்ணிக்கை | 1,000 வாகனங்களின் போது விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| **2013** | 2,190 | ,6870 | 13,525 | 15,292 | 37,877 | 5,203,678 | 7 |
| **2014** | 2,261 | 6,847 | 12,950 | 13,992 | 36,050 | 5,633,234 | 6 |
| **2015** | 2,590 | 7719 | 13,095 | 13514 | 36,918 | 6,302,141 | 6 |

***தகவல் - இலங்கைப் பொலிஸ்***

## 2.1.4. சட்ட விரோத மதுபோதை மற்றும் போதைவஸ்து தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிக்க அவசியமான கடவடிக்கைகளை மேற்கொள்ளல்

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மதுபோதை மற்றும் போதைவஸ்துதொடர்பான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் முகமாக தேவையான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படைக்கு பெற்றுக்கொடுத்து அது தொடர்பான குறற்ங்களை கண்டுபிடிப்பதற்கும், அக்குற்றங்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிறைவு செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையினால் மீளாய்வு வருடத்தினுள் அந்த நிலைமையானது 97%ஆகவளர்ச்சியடைந்துள்ளமை அட்டவணை 05இன் ஊடாக தெளிவாகின்றது.

**போதைவஸ்துக்கள்**

**எண்ணிக்கை அட்டவனை - 05**

| தொ. இல. | குற்றம் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட |
| 1 | போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் பதிவாதலும் தீர்த்தலும் | 73,383 | 70,678 | 74,366 | 71,712 | 89,996 | 87,846 |
| 2 | மதுபானம் தொடர்பான குற்றங்கள் பதிவாதலும் தீர்த்தலும் | 124,603 | 119,198 | 114,790 | 110,234 | 113,944 | 109,256 |
| **மொத்தம்** | | **197,986** | **189,876** | **189,156** | **181,946** | **203,940** | **197,112** |
| **சதவிகிதம்** | | | **96%** | | **96%** | | **97%** |

***தகவல் - இலங்கைப் பொலிஸ்***

அதே சமயம் நாட்டினுள் போதைவஸ்துக்கள் பரவியுள்ள நிலைமையினை ஆராய்ந்து பார்த்து அதனூடாக கூடுதலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற பிரதேசங்களை அடையாளம் கண்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அளித்து செயற்பாடுகளை மேற்கொள்ள அவசியமான ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்ததன் மூலம் நாட்டினுள் பரிமாறிக்கொள்ளப்படும் போதைவஸ்துக்களை கூடுதலாகபைப்பற்ற முடிந்துள்ள நிலைமை 06ஆம் அட்டவணையினூடாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

**போதை வஸ்த்துக்கள் கைப்பற்றப்பட்ட அளவுகள்**

**எண்ணிக்கை அட்டவனை - 06**

| போதை வஸ்த்துக்கள் | கைப்பற்றப்பட்ட அளவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | | | 2014 | | | 2015 | | |
| | கிலோ கிராம் | கிராம் | மில்லி கிராம் | கிலோ கிராம் | கிரா ம் | மில்லி கிராம் | கிலோ கிராம் | கிராம் | மில்லி கிராம் |
| கஞ்சா | 10,361 | 336 | 365 | 10,758 | 19 | 886 | 13,253 | 55 | 225 |
| அபின் | - | 496 | 150 | - | 5 | - | - | 249 | 500 |
| ஹசிஸ் | - | 274 | 5 | 1 | 95 | 107 | 4 | 187 | 630 |
| ஹெரொயின் | 337 | 859 | 965 | 312 | 549 | 4 | 44 | 521 | 89 |
| மொபின் | - | 112 | 130 | - | - | 90 | - | - | - |
| கொகெயின் | - | - | - | - | 2 | 964 | 81 | 672 | 333 |
| **ஏனைய** | 139 | 700 | 185 | 46 | 852 | 961 | 166 | 751 | 909 |
| **மொத்தம்** | **10,837** | **2,777** | **1,800** | **11,117** | **1,522** | **3,012** | **13,548** | **2,435** | **2,686** |

***ஆதாரம் - இலங்கைப் பொலிஸ்***

## 2.1.5. ஊழல் ஒழிப்பு தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பினை வழங்கல

விபச்சாரத் தொழில் விபச்சார விடுதிகளை நடாத்திச் செல்லல் போன்ற ஊழல் குற்றங்கள் 6உம் களவாக மின்சாரம் எடுத்தல், அனுமதிப்பத்திரம் இன்றி பல்வேறான கைத்தொழில்கள் வியாபாரங்கள் மேற்கொள்ளல். சட்ட விரோத மரங்களை ஏற்றிச் செல்லல், சட்ட விரோதமாக மண் மற்றும் மணல் ஏற்றிச் செல்லல் ஆகிய 31 சட்டவாக்க குற்றங்கள் நிகழ்கால சமூகத்தில் தீங்கான அழுத்தங்களை எற்படுத்துகின்ற காரணத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தேவைாயன நடவடிக்கைகள் மேற்கொண்டமையானது 95%யும் தாண்டியுள்ளதனை அட்டவணை 07 புலப்படுத்துகின்றது. இது அமைச்சின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பின் மூலமாக இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையின் திறமை மற்றும் முயற்சியின் மூலமாக இடம்பெற்றமையானது பாராட்டத்தக்கது.

**ஊழல் மற்றும் சட்டவாக்க குற்றங்கள்**

**எண்ணிக்கை அட்டவனை - 07**

| தொ. இல. | குற்றம் | 2013 | | 2014 | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | பதிவாகிய | தீர்க்கப்பட்ட | சதவிகிதம் |
| 1 | **ஊழல் குற்றங்கள் (6)** | **2,724** | **2,627** | **1,921** | **1,856** | **1,796** | **1,788** | **99.5%** |
| 2 | **சட்டவாக்க குற்றங்கள் (31)** | **73,124** | **69,541** | **54,877** | **52,998** | **46,290** | **43,896** | **94%** |
| **மொத்தம்** | | **75,848** | **72,168** | **56,798** | **54,854** | **48,086** | **45,684** | **95%** |
| **சதவிகிதம்** | | | **95%** | | **97%** | | **95%** | |

***ஆதாரம் - இலங்கைப் பொலிஸ்***

## 2.1.6. விசேட அதிரடிப்படை மேற்கொண்ட ஏனைய சுற்றி வளைப்புக்கள்

அமைச்சின் கீழ் விசேட கருத்திட்டமாக இயங்கும் விசேட அதிரடிப்படையை உபயோகித்து நாட்டினுள் இடம்பெறுகின்ற முறையற்றதும் அழிவை ஏற்படுத்துவதுமான தொழில்களை கட்டுப்படுத்துவதற்காக கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை அட்டவணை 08 இன் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

**விசேட அதிரடிப்படை மேற்கொண்ட ஏனைய சுற்றி வளைப்புக்கள்**

**எண்ணிக்கை அட்டவனை - 08**

| தொ. இல. | கைப்பற்றப்பட்ட பொருட்கள் | | சம்பவங்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட எண்ணிக்கை/ தொகை | கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | குப்பைத் தேயிலை | | 29 | 325,655,900 கி.கிராம் | 45 |
| 2 | மாடுகளை ஏற்றிச் செல்லல் | | 31 | 272 மாடுகள் | 75 |
| 3 | நுகர்விற்கு எடுக்க முடியாத இறைச்சி | | 19 | 3,460,900 கி.கிராம் | 57 |
| 4 | ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் | | 23 | இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள்16 ரிவோல்வர் 02டெட்டனெடர் 336 கைக்குண்டுகள்04ஷொட்கன் ஆயுத கார்ட்ரிஜ் 07 | 26 |
| 5 | சட்ட விரோத மாணிக்கம் அகழ்தல் | | 58 | கம்ப்ரஷர் இயந்திரங்கள்12 பக்கோ இயந்திரங்கள்22 | 125 |
| 6 | போதைப் பொருள் தொடர்பான சுற்றி வளைப்புக்கள் | மதுபோதை | 256 | அரச மதுசாரம் 454 சட்டவிரோத 16,002 | 284 |
| | | புகைத்தல் | 25 | 201,384 | 26 |
| 7 | வேறு | | 38 | - | 81 |
| **மொத்தம்** | | | **479** | | **719** |

*ஆதாரம் - விசேட அதிரடிப்படை*





*விசேட அதிரடிப்படையினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் சில சந்தர்ப்பங்கள்*

## 2.1.7. பொதுமக்கள் குறைபாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு அவசியமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

குற்றங்கள் இடம்பெறுகின்ற போது விரைவாக செயற்படும் பொருட்டு பொலிசாரை தெரிவுபடுத்துதல், போலீசினால் நிறைவேற்றப்படாத விடயங்கள் தொடர்பில் உதவிகளைப் பெறும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இச் செயற்பாட்டினூடாக பொதுமக்களுக்கு மிக விசேடமான சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த முறையினூடாக பெறப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான முறைப்பாடுகளின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையினூடாக காண்பிக்கப்படுகின்றது.



*118 அவசரச அழைப்பு பிரிவு*

**பொதுமக்கள் குறைகள் முறையூடாககிடைக்கப்பெற்றவையும் தீர்க்கப்பட்டவைகளினதும் எண்ணிக்கை**

**எண்ணிக்கை அட்டவனை - 09**

| தொ. இல. | முகாமை செய்யும் முறைமை | 2015 | | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| | | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
| 1 | பொலிஸ் மா அதிபரிடம் சொல்லுங்கள் | 2,082 | 2,019 | 96% |
| 2 | பொலிஸ் மா அதிபரின் மக்கள் குறைகேள் தினம் | 1,055 | 780 | 74% |
| 3 | பொதுமக்கள் குறைகேள் பிரிவு | 1,881 | 1,429 | 76% |
| 4 | 119 அவசர இலக்கம் | 903,245 | 899,181 | 99% |
| 5 | 118 அவசர இலக்கம் | 155,357 | 137,300 | 88% |
| **மொத்தம்** | | **1,063,620** | **1,040,709** | **97.8%** |

*ஆதாரம் - இலங்கைப் பொலிஸ்*

## 2.2. முறையான பொலிஸ் சேவையின் பொருட்டு அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள்

### 2.2.1. பொலிஸ் கட்டளைச் சட்டத்தினை புதுப்பித்தல்

நடைமுறையிலுள்ள பொலிஸ் கட்டளைச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு 2014 ஆம் ஆண்டில் அமைச்சரவை வழங்கிய அனுமதியின் படி பொலிஸ் திணைக்களத்தின் உள்ளகக் குழுவொன்றும் களத்திறன்கள் கொண்ட வெளியகக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டு அதன் மூலமாக கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் அடையாளம் காணபட்பட்டன. அதன்படி கட்டளைச் சட்டத்தினை திருத்துவதிலும் பார்க்க புதிய சட்டமூலமொன்று உருவாக்கப்படுவது பொறுத்தமானதாக இருக்குமென அக்குழு பரிந்துரை செய்தது. கௌரவ பிரதமர் அவர்களால் 2015.05.26 ஆம் திகதி இடம்பெற்ற ஓர் கலந்துரையாடலின் போது நிகழ்கால யுகத்திற்கு பொருந்தும் வகையிலான புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி புதிய சட்டமூலத்தை அமைப்பதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 2.2.2. பொலிஸ் பல்கலைக்கழகமொன்றை தாபித்தல்

அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமைகளை முழுமையாகக் கொண்ட தொழிற்துறை அவிவிருத்தியுடைய பொலிஸ் அதிகாரியொருவரை உருவாக்குவதற்கு உறுதுணையாக அமையும் பொலிஸ் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்குவதற்கு அவசியமான சட்ட வரைவை தயாரித்தல், அமைச்சரவையின் அனுமதியைப் பெறல் மற்றும் பல்கலைக் கழகத்திற்கு அவசியமான நிதியினை பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றன.




*பொலிஸ் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போது*

## 2.2.3 வாகன நெரிசலை முகாமைத்துவம் செய்தல்

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பிரதான கடமையாக காணப்படுகின்ற போக்குவரத்து கட்டுப்பாட்டை மேற்கொள்ள அவசியமான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு நடாத்தப்பட்ட ஒரு நாள் செயலமர்வொன்று அப்போதைய அமைச்சராகவிருந்த கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களது தலைமையிலும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பங்குபற்றலுடன் 2015.06.06 ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக மன்றத்தில் நடாத்தப்பட்டது.

இதன் போது நாள்தோறும் அதிகரித்துச் செல்லும் கொழும்பு நகரினதும் நெரிசல் ஏற்படும் ஏனைய பிரதேசங்களினதும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் பொருட்டு அனைத்து நிறுவனங்களும் கூட்டாக இணைந்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறைமையொன்றை உருவாக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை போக்குவரத்து நெரிசலை முகாமைத்துவம் செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நீண்டகால யோசனைகளும் அடையாளம் காணப்பட்டன.

அதேவேளை பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுதி 351இற்கு அமைவாக மிக வேகமாக அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துக்கள் தொடர்பில் விடயங்களை ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் அவசியமும் கவனத்திற்கொள்ளப்பட்டது.



*போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர்*


## 2.3 அமைச்சினதும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் முன்னேற்றத்தினை அடையும் பொருட்டு

### 2.3.1. கணக்கீட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்துதல

பொலிஸ் திணைக்களத்திற்கு இணைச் சேவையானது சேவைபுரியும் கணக்காய்வாளர்கள் உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் 80 பேருக்காக திணைக்களத்தின் கணக்கீட்டு செயற்பாடுகளை முறைப்படுத்தும் வகையில் சரியான கணக்கீட்டு முறைமை, அறிக்கையிடல், சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனை வழிகாட்டல்களை பின்பற்றுதல் தொடர்பான ஒரு நாள் செயலமர்வொன்று 2015.05.15 ஆம் திகதி செத்சிரிபாய IIஆம் படிமுறையின் கேட்போர்கூடத்தில்ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் வேலை செய்யும் மனப்பாங்கு மற்றும் நேர்ச்சிந்தனை முன்னேற்றம் தொடர்பாகவும் அதிகாரிகள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

### 2.3.2. திட்டமிடல் செயற்பாட்டை முறைப்படுத்துதல்

திட்டமிடலூடாக நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு முறையான திட்டமிடல் செயற்பாட்டை நடத்திச் செல்லல் தொடர்பாக அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களிலும் திட்டமிடல் அலுவலர் உள்ளடங்களாக சிரேஷ்ட அதிகாரிகள் 125 பேரினை தெளிவுபடுத்தும் செயலமர்வொன்று 2015.08.11 ஆம் திகதி பெலவத்தை கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.





*முறையான திட்டமிடல் தொடர்பான செயலமர்வின் ஓர் சந்தர்ப்பம்*

### 2.3.3. *முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்*

மீளாய்வு வருடத்தினுள் அமைச்சினதும் அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களையும் ஒன்றினைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 05 நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் ஒவ்வொரு நிறுவனங்களிலும் அவற்றுக்கேயுரியதான பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கும் அதற்கான தீர்வுகளை ஆராய்வதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அதன்படி திட்டங்களை தயாரிப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.



*முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் ஓர் சந்தர்ப்பம்*

## 2.3.4. சர்வதேச போதைப்பொருள் ஒழிப்புத் தின நிகழ்வு

சர்வதேச ரீதியில் போதைப் பொருள் கடத்தலை வீழ்ச்சியடையச் செய்தல் மற்றும் அபாயகரமான ஔடத வகைகளையும் இரசாயன தவறான பாவனையின் காரணமாக நிகழும் அசம்பாவிதங்களை தடுக்கும் பொருட்டு பொது மக்களை தெளிவுபடுத்தும் நோக்கில், கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் சுமார் 8,000 பொதுமக்களது பங்குபற்றலுடன் 2015.06.26 ஆம் திகதி அலரி மாளிகையில் சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தின நிகழ்வு இடம்பெற்றது.







*போதைப்பொருள் ஒழிப்புத் தின நிகழ்வின் சில சந்தர்ப்பங்கள்*

## 2.4. மேற்பார்வை செய்யப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் வினைத்திறன்

- பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளின் தங்குமிட வசதிகள் மற்றும் சுகாதாரவசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பொறியியல் கடமைகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணிமனையின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரசவி (*பொருத்திய வீடுகள்)* வீடமைப்பு கருத்திட்டத்தினூடாக பொலிஸ் திணைக்களத்தின் 399 கட்டிடங்களும் விசேட அதிரடிப்படையின் 142 கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.






***அமைக்கப்பட்ட பொருத்திய வீடுகளின் உள்ளேயும் வெளியிலும்***

- பொலிஸ் அதிகாரிகளை தொழிற்துறை ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கட்டான பொலிஸ் பயிற்சிக் கல்லூரி மற்றும் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளின் அபிவிருத்திக்காக 41 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டு 02 கட்டிடங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 17 கட்டிடங்களின் வேலைகள் நடைபெறுகின்றன.





***கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களின் புகைப்படங்கள்***

- பொலிஸ் திணைக்களத்தின் தகவல் மற்றும் தொலைத் தொடர்புகள் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தொழிநுட்பத்தை திணைக்களத்திற்கு அறிமுகம் செய்தலின் கீழ் பொலிஸ் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு கருத்திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் கருத்திட்ட முகாமைத்துவ அலகொன்றினை தாபிக்கும் ஆரம்பகட்ட செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.



- அமைச்சினது வழிகாட்டலின் கீழ் இலங்கை பொலிஸ் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 592 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு புதிய பொலிஸ் கட்டிடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுள் எல்ல, தெனிபாய, கட்டான, பதுளை, அம்பன்பொல, பருத்தித்துறை, வெல்லவ, வீரவில ஆகிய பொலிஸ் நிலையங்களும் தங்காலை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், பானந்துறை, பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மாஹுவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், நுவரெலியா பொலிஸ் பரிசோதகர் சுற்றுலா விடுதி, நுவரெலியா கனிஷ்ட பொலிஸ் சுற்றுலா விடுதி ஆகிய கட்டிடங்கள் உள்ளடங்கும்.






***பருத்தித்துறை பொலிஸ் நிலையம்***

***நுவரெலியா கனிஷ்ட பொலிஸ் சுற்றுலா விடுதி***

- விசேட அதிரடிப்படை பிரிவில் காணப்படுகின்ற கட்டிட பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 44.32 மில்லியன் ரூபா செலவில் 18 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கிடையில் கோனஹேன முகாமில் மலசலகூடத் தொகுதி, கட்டுகுறுந்த நீச்சல் தடாகத்தின் பார்வையாளர் மண்டபம், தலைமையகத்தின் இரண்டு மாடிக் கட்டிடம், அம்பாறை முகாமின் பிரதான நுழைவாயில் மற்றும் முன்பக்க வேலி, ஹப்புத்தளை முகாமின் முன்பக்க வீதி மற்றும் நுழைவாயில் தற்போது முழுமையாக அமைத்து முடிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய கட்டுமான செயற்பாடுகள் நிறைவு நிலையில் உள்ளன.

*விசேட அதிரடிப் படை தலைமை அலுவலகக் கட்டிடம்*

## 2.5. மீளாய்வு வருடத்தினுள் விடயப்பரப்பிற்குள் அடங்காத நிறுவனங்களின் செயற்பாட்டு முன்னேற்றம்

### 2.5.1. சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்தியதாக.........

மீளாய்வு காலப்பகுதியினுள் சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை மற்றும் ரஷ்ய கூட்டரசிற்கும் இடையில் கடமை மற்றும் இராஜதந்திர கடவுச் சீட்டு உரிமையாளர்கள் இரு நாட்டிற்கும் வருகை தரும் போது விசா பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட கால எல்லைக்கு விடுவிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது.





*ரஷ்ய கூட்டரசுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் ஓர் சந்தர்ப்பம்*

### 2.5.2. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குதலும், தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் பரிமாற்றம் செய்துகொள்ளும் வழிமுறையொன்றை உருவாக்குதலையும் நோக்கமாகக் கொண்டு தேசிய தனிநபர் பட்டியல் ஒன்றை உருவாக்குதல் மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்கும் கருத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையான உரிய சட்ட அனுமதிகளைப் பெறல், அலுவலர்களைப் பயிற்றுவித்தல், மற்றும் இணைத்துக் கொள்ளல், பிரதேச அலுவலகங்களை வலுவூட்டுதல், தரவுகளை சேகரித்தல், புகைப்படம்எடுத்தல் தொடர்பில் பயிற்சி வழங்குதல் போன்ற செயற்பாடுகள் ீளாய்வு வருடத்தினுள் மேற்கொள்ளல்.






*கிராம சேவை உத்தியோகத்தாகளுக்கு கைவிரல் அடையாள பயற்சி வழங்கிய போது*

### 2.5.3. சிறைச்சாலை மேற்பார்வை அலுவலர்களைப் பயிற்றுவித்தல்

சிறைச்சாலை வரலாற்றில் நூறாவது சிறைச்சாலை மேற்பார்வை அலுவலர்கள் குழுவானது (208 அலுவலர்கள்) தமது பயிற்சியை நிறைவு செய்த பிறகு 2015.09.15 ஆம் திகதி அப்போதைய சட்டமும், ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சராக இருந்த கௌரவ திலக் மாரப்பன அவர்களது தலைமையில்இடம்பெற்றஒரு நிகழ்வில் கலைந்து செல்லும் நிகழ்வு இடம்பெற்றது.



*பயிற்சி நிறைவு விழாவில் கலைந்து செல்லும் ஓர் சந்தர்ப்பம்*

### 2.5.4. தேவாலயங்களை அமைத்தலும் புனர்வாழ்விற்காக அபிவிருத்தி ஒத்துழைப்பினைவழங்களும்.

வாசலகோட்டை, புனித அந்தோனியார் தேவாலயம், மடுமாதா தேசிய வணக்கஸ்தலம் உட்பட நாடு முழுவதும் 33 தேவாலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 2.5.5. தன்னியக்க கைவிரல் அடையாள முறைமை தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தல்.

குற்றவாளிகளின் கைவிரல் அடையாளத்தினை தன்னியக்க முறையில் அடையளங் காணும் வழிமுறைகள் தொடர்பில் குற்றச் செயல் நிகழ்ந்த இடத்தினை பரிசோதனை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வொன்று அமைச்சின் ஒருங்கிணைப்புடன் நபர்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினூடாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனூடாக குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் செயற்பாட்டை விரைவாக்குவதனூடாக குற்றங்களுக்கு தீர்ப்பளிக்கும் செயற்பாட்டை விரைவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.





*பொலிஸ் அதிகாரிகளுக்கான அறிவூட்டல் செயலமர்வொன்று*

# 03. பிரிவு ரீதியான செயற்பாட்டு வினைத்திறன்

## 3.1 நிர்வாகப் பிரிவு

- அமைச்சின் அனைத்து நிறுவன மற்றும் உள்ளக நிர்வாக நடவடிக்கைகள் நிர்வாகப் பிரிவினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.
  - அமைச்சின் விடயப்பரப்பு திருத்தம் செய்யப்படுவதனை அடிப்படையாகக் கொண்டு அமைச்சின் பணியாட் தொகுதிக்கு கீழ்வரும் 26 புதிய பதவிகளை உள்வாங்கிக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படன.
    - மேலதிக செயலாளர் - 01
    - பிரதம நிதி அலுவலர் - 01
    - சிரேஷ்ட உதவிச் செயலாளர் - 01
    - கணக்காய்வாளர் - 01
    - சட்ட அதிகாரி - 01
    - புள்ளிவிபர உத்தியோகத்தர் - 01
    - அபிவிருத்தி அலுவலர் - 10
    - அரச முகாமைத்துவ உதவியாளர் - 10
  - வருடத்தினுள் எண்ணிக்கை அட்டவணை 10 இன் படி அமைச்சின் பணியாளர் தொகுதியில் மாற்றங்கள் இடம்பெற்ற அதேவேளை அதற்குரியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் நிர்வாகப் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்டது.

**பணிக்குழாம் மாற்றங்கள் - 2015**

**எண்ணிக்கை அட்டவனை - 10**

| தொ. இல. | புதவி | சேவை | அனுமதிக்கப்பட்ட தொகை | இடமாற்றம் பெற்ற அலுவலர்கள் | ஓய்வு பெற்றவர்கள் | பதவி விலகியவர்கள் | இடமாற்றம் பெற்று வந்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | | 01 | 02 | - | - | 02 |
| 2 | மேலதிக செயலாளர் | இ.நி.சே | 02 | 02 | - | - | 02 |
| 3 | பிரதம நிதி அலுவலர் | இ.க.சே | 01 | - | - | | |
| 4 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே | 03 | - | - | - | 01 |
| 5 | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | 01 | 01 | - | - | 01 |
| 6 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | 01 | - | - | - | 01 |
| 7 | உதவிச் செயலாளர் | இ.நி.சே | 03 | 03 | - | - | 02 |
| 8 | அபிவிருத்தி அலுவலர் | அ.உ.சே. | 24 | 01 | - | - | 03 |
| 9 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | 40 | 02 | - | - | 09 |
| 10 | சுாரதி | சாரதி சேவை | 15 | 04 | - | - | 05 |
| 11 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே | 18 | 01 | - | - | 03 |

*தகவல் - அமைச்சின் நிர்வாகப் பரிவு*

- பணியாளர்களின் அறிவு, தொழிநுட்ப ஆற்றல் மற்றும் மொழித் தேர்ச்சியை முன்னேற்றுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகளுக்கு 59 பேர் 2015ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்டனர்.

**உள்நாட்டுப் பயிற்சிகள்**

**எண்ணிக்கை அட்டவனை- 11**

| பயிற்சிப் பாநெறிகள் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிறுவன அபிவிருத்திக்கான தொழிற்துறை பற்றிய செயலமர்வு - இலங்கை மன்றக் கல்லூரி | 01 |
| உளவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி – களனிப் பல்கலைக்கழகம் | 01 |
| அலுவலக முகாமைத்துவம் மற்றும் சிந்தனை விருத்தி | 12 |
| மனித வள முகாமைத்துவம் | 04 |
| தாபனக் கோவை ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள் | 15 |
| கருத்திட்ட முகாமைத்துவம் | 01 |
| அரச அதிகாரிகள் அறிய வேண்டிய சட்டதிட்டங்கள் | 05 |
| அரச காணி முகாமைத்துவம் | 01 |
| அரச கணக்காய்வு நடவடிக்கைகள் | 03 |
| அரச கொடுப்பணவு ஒழுங்குவிதிகள் | 02 |
| திறைசேரி ஒதுக்கீடுகளும் முகாமைத்துவமும் | 01 |
| தொழிற்துறைகடிதம் எழுதுவது தொடர்பான தேர்ச்சி | 01 |
| அரச நிதி ஒழுங்குவிதிகள் | 07 |
| சம்பள மாற்றங்கள் | 01 |
| ஓய்வூதியக் கொடுப்பணவு நடவடிக்கைகள் | 04 |
| **மொத்தம்** | **59** |

***தகததகவல் - அமைச்சின் நிர்வாகப் பரிவு***

## வெளிநாட்டுப் பயிற்சிகள்

**எண்ணிக்கை அட்டவனை- 12**

| அதிகாரியின் பெயர் | பதவி | நாடு | பயிற்சிப் பாடநெறி | காலம் |
|---|---|---|---|---|
| திரு. டீ.எம்,கே.பீ. தென்னகோன் | செயலாளர் | அவுஸ்திரேலியா | தீவிரவாத வன்முறைகளுக்கு எதிரான பிரதேச சம்மேளனம் | 04 வாரங்கள் |
| திரு.ஆனந்த ஹெட்டி ஆரச்சி | பிரதம நிதி அதிகாரி | ஐக்கிய இராச்சியம் | நிதி முகாமைத்துவம் | 02 வாரங்கள் |
| திரு.வி.கே.எச். கோலித | பிரதம கணக்காளர் | ஐக்கிய இராச்சியம் | நிதி முகாமைத்துவம் | 02 வாரங்கள் |
| திரு.ஓஷத குணதிலக்க | உதவிச் செயலாளர் | மியன்மார் | வங்காள விரிகுடாவை அண்மித்த நாடுகளின் தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு பற்றியதான பல்தரப்பு ஒப்பந்தம் தொடர்பான கூட்ட (பிம்ஸ்டெக்) சம்மேளனம் | 03 நாட்கள் |

***தகவல் - அமைச்சின் நிர்வாகப் பரிவு***

- அமைச்சின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் பொதுமக்கள் மனங்கவர் இடமாகவும் நடாத்திச் செல்லும் நோக்கத்துடன் அமைச்சிற்கு அவசியமான அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்களை கொள்வனவு செய்யும் அலுவலரின் நடவடிக்கைகளையும், அலுவலக சூழலை துப்பரவு செய்தல் மற்றும் உரிய வகையில் பராமரித்தலும், நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் அலுவலக வாடகை செலுத்துதல் ஆகிய செயற்பாடுகளும் கனிணி நிழற் பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம், தொலைநகல் இயந்திரம், வாகனங்கள் என்பவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- நிறுவனத்தினதும் நிர்வாகத்தினதும் நடவடிக்கைகள் தொடர்பிலான 07 அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகள் தொடர்பில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- அமைச்சரவைக்கு புதிய இடமொன்றைப் பெறுவது தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

- அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைப் பொலிஸ், விசேட அதிரடிப்படை, அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, காலி மரபுரிமை மன்றம் மற்றும் நிறுவனங்களின் நிர்வாக மற்றும் நிறுவன செயற்பாடுகள் தொடர்பாக நிர்வாகப் பிரிவு செயற்பட்டுள்ளது.

## 3.2 பொலிஸ் பிரிவு

- பொலிஸ் உத்தியோகத்தர்களின் நிறுவன மற்றும் ஒழுக்க விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- பொலிஸ் உத்தியோகத்தர்களின் அனைத்துவிதமான பதவிகளுக்கான இணைத்துக் கொள்ளல் ஒழுங்கு விதிகளை திருத்தம் செய்து முறையாக தயாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- அமைச்சரவை அனுமதி பெறப்பட வேண்டிய அமைச்சரவைப் பத்திரங்கள் 58 தயாரிக்கப்பட்டு கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடன் அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தல்.

- பொலிஸ் வட்டாரம், பிரிவு, பொலிஸ் நிலையம், காவல் நிலையம் என்பவற்றை புதிதாக நிறுவுதல் அல்லது புதுப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்வதின் கீழ் காவல் நிலையமாகவிருந்த சிலாவத்துறை, மெதகொட, மாமடுவ, பூவரசன்குளம், உளுக்குளம் பரயான்குளம் ஆகியவற்றை பொலிஸ் நிலையங்களாக பெயரிடுவதற்கும் கட்டானையில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

- பொலிஸ் பாதுகாப்பு, பிரபுக்கள் பாதுகாப்பு முன்னகர் வாகன வேண்டுகோள்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளும்

- பொலிஸ் நிலையங்கள், பாதுகாப்பு அரண்கள், விசேட அதிரடிப்படை முகாம்கள் என்பவற்றுக்குரியதாக 479 காணிகளை பெற்றுக்கொள்ளல், கைப்பற்றல் தொடர்பான அடிப்படை செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையனி கடமைகளுக்காக உள்வாங்கப்படும் பொலிஸ் திணைக்கள அதிகரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் யோசனையொன்றை ஐ.நா. சபையின் அலுவலகத்திற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினூடாக அனுப்பி அனுமதி பெறப்பட்டது.

- பொலிஸ் உத்தியோகத்தர்களை ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையணிக்கு கடமையின் பொருட்டு பங்குபற்ற வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். அதன்படி 2015ஆம் வருடத்தினுள் 26 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையின் கடமையின் பொருட்டு கலந்து கொள்ள வைக்கப்பட்டனர்.

- மீளாய்வு வருடத்தினுள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற ஒத்திவைப்பு நேரத்தின் போது கேட்கப்படும் கேள்விகள் தொடர்பாக 23 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற பொது மனுக் குழு, நிர்வாக நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) ஆகிய நிறுவனங்களின் வேண்டுகோளின் படி பரிந்துரை அறிக்கைகளைப் பெற்றுக்கொடுக்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- 1984ஆம் இறுதியாக திருத்தப்பட்டதன் பின்னர் இதுவரையில் எந்தவித திருத்தங்களும் இன்றி நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொலிஸ் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய பொலிஸ் சட்டமொன்றைத் தயாரிப்பதற்குரியதான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சட்ட விஞ்ஞானம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவன அதிகாரிகளின் சட்ட விஞ்ஞானம் தொடர்பான பிரயோக மற்றும் செயன்முறை அறிவுகளை வளர்த்தலை நோக்கமாகக் கொண்டு நீதி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் எமது அமைச்சும் இணைந்து கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

## 3.3. நிதிப்பிரிவு

- 2015 ஆம் வருடத்தில் நிதி ஒதிக்கீடுகளை பிரதிபலன் மிக்கதாகமுகாமைத்துவம் செய்ததுடன் அதன்படி அமைச்சின் நிதி முன்னேற்றம் மொத்த ஒதுக்கீடுகளில் 80% ஆகும் (மீண்டெழும் செலவு 98%, மூலதன செலவு 71%).


**நிதி ஒதுக்கீடுகளும் பயன்பாடுகளும் - 2015**


**எண்ணிக்கை அட்டவனை- 13**

**ரூ. '000**

| கருத்திட்டம் | செலவின் வகை | மதிப்பீட்டு ஒதுக்கீடு | மாற்றுதல் கள் | உண்மையா ன ஒதுக்கீடு | மொத்த செலவு | செலவு விகிதாசா ரம் |
|---|---|---|---|---|---|---|
| அமைச்சரின் அலுவலகம் | மீண்டெழும் | 27,700 | 3,663 | 31,363 | 30,193 | 99% |
| | மூலதன | 2,300 | 550 | 2,850 | 2,524 | 88% |
| அமைச்சின் நிர்வாக மற்றும் நிறுவன செலவுகள் | மீண்டெழும் | 297,950 | 6,474 | 304,424 | 290,162 | 95% |
| | மூலதன | 49,010 | 550 | 48,460 | 27,769 | 57% |
| விசேட அதிரடிப்படை | மீண்டெழும் | 5,758,200 | 540,000 | 6,298,200 | 6,245,662 | 99% |
| | மூலதன | 928,000 | - | 928,000 | 673,853 | 72% |
| இராஜாங்க அமைச்சின் பணியாளர்கள் | மீண்டெழும் | 6,859 | - | 6,859 | - | 0% |
| | மூலதன | 626 | - | 626 | - | 0% |
| மொத்தம் | மீண்டெழும் | 6,090,709 | 550,137 | 6,640,846 | 6,566,017 | 98% |
| | மூலதன | 979,936 | - | 979,936 | 704,146 | 71% |

*தகவல் - அமைச்சின் நிதிப் பிரிவு*



## ➢ நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- 2016ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமா்ப்பிக்கும் போது இவ் அமைச்சின் கீழ் இயங்கும் பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப்படை, நபர்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஆகிய நிறுவனங்களினது வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளையும் சேகரித்து 2015.07.20ஆம் திகதி அமைச்சரவைப் பத்திர இலக்கம்POD/ACC/13/15 கீழ் பணிப்பாளா் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமா்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அரச அதிகாரிகளின் முற்பண செலவுகள் மற்றும் பெறுதல் எல்லைகளை முறையாக முகாமைத்துவம் செய்து வழிநடத்திச் செல்லப்பட்டது.

**அரச அதிகாரிகளின் முற்பணம் “பி” நிதி கணக்கு**

**எண்ணிக்கை அட்டவனை– 14**

**ரூ. 000**

| | செலவின் உச்ச எல்லை | கிடைக்கும் ஆகக் குறைந்த எல்லை | உச்ச செலவின் எல்லை |
|---|---|---|---|
| **ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள்** | 20,000 | 10,500 | 618,000 |
| **வருட இறுதியில் உண்மைப் பெறுமதிகள்** | 975 | 11,404 | 167,733 |
| **மொத்தம்** | 20,975 | 21,904 | 785,733 |

***தகவல் - அமைச்சின் நிதிப் பிரிவு***

- அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டிய அமைச்சரவையின் பத்திரங்கள் 2 தயாரிக்கப்பட்டு கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடன் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது.

- திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய கீழ்வரும் அறிக்கைகள் உரிய காலப் பகுதிக்குள் உரியமுறையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல்.
  - வருடாந்த நிதிக்கோரிக்கை பத்திரம் - ஒவ்வொரு மாதத்திலும் வேலை செய்யும் முதலாம் திகதிகளில்
  - மாதாந்த நிதிக்கோரிக்கை பத்திரம் - ஒவ்வொரு மாதத்தின் வேலைசெய்யும் முதல் இரண்டு நாட்களில்
  - மாதாந்த நிதிச்சாராம்சம் - ஒவ்வொரு மாதத்தின் முதல் இரண்டு நாட்களில்
  - சம்பளங்களும் பணியாட்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை – ஒவ்வொரு மாதத்தின் முதல் இரண்டு நாட்களில்

- கணக்காளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க படவேண்டிய மாதாந்த வங்கி ஒப்பிட்டு அறிக்கை ஒவ்வொரு மாதத்திலும் 15ம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பித்தல்.

- 2014 ஆம் வருடத்தின் ஒதுக்கீட்டு நிதி அறிக்கை மற்றும் அரச அதிகாரிகளின் முற்பண“பி” நிதிக் கணக்கைத் தயார் செய்து 2015-03-31 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்

## அமைச்சரவை மற்றும் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்களங்களுக்குறியதான பெறுகைகளை மேற்கொள்ளல்

- **பொலிஸ் திணைக்களம்**

  - நாராஹேன்பிட்ட பொலிஸ் வைத்தியசாலைக் கட்டிட கட்டுமான வேலைகளை நிறைவு செய்வதற்கான கட்டுமான ஒப்பந்தத்தை 220.22 மில்லியன் ரூபாவிற்கு (வட்வரி இன்றி) உரியதான பெறுகைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

  - மருதானை, தனிநபர் உத்தியோகத்தர்கள் விடுதிக் கட்டிடத்தை அமைப்பது தொடர்பிலான மிகுதி வேலைகளை நிறைவு செய்வது தொடர்பான கட்டுமான ஒப்பந்தத்தை 244.83 மில்லியன் ரூபாவிற்கு (வட்வரி இன்றி) உரியதான பெறுகை ஆவணங்களை அனுமதிப்பது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

  - பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் கான்ஸ்டபல்/பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோருக்கான தேல் பாதணிகள் 100,000 கொள்வணவு செய்யும் (மதிப்பீட்டு செலவு 375 மி.ரூ) பெறுகைக்குரியதான பெறுகை அவணங்களை அனுமதிப்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

- **சிறைச்சாலைகள் திணைக்களம்**

  - சிறைச்சாலை கைதிகளுக்கான உணவுப் பொருட்கள் (பச்சை மற்றும் உலர் உணவுப் பொருட்கள்) கொள்வணவு 2015/16 பெறுகைக்குரியதான 2015.09.28ஆம் திகதிய MinLO/03/15/PRIபத்திர இலக்கம் 62/2015 அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அச்சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெறுகை நடவடிக்கைகள் நிறைவுபெறும் வரை முன்னர் இருந்த பெறுகை ஒப்பந்தத்தின் கீழ் அந்த நிறுவனத்தின் மூலமாகவே கொள்வணவு செய்வதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

  - அதேபோல், சிறைச்சாலைகள் திணைக்களத்தை 1942∴10ஆம் இலக்க 2015 நவம்பர் 24ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் அடிப்படையில் இவ் அமைச்சின் விடயப்பரப்பை மாற்றும் வரையில் இப் பெறுகைக்குரியதான இரண்டு சந்தர்ப்பங்களில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் மூலமாக ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

- **அமைச்சரவைப் பெறுகைக்குழு**

  - பொலிஸ் திணைக்களத்திற்குரியதான கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் கொள்வணவு தொடர்பான அமைச்சரவை பெறுகைக் குழுக் கூட்டங்கள் 04 தடவை நடாத்தப்பட்டுள்ளதோடு இதன்போது 06 கட்டுமான ஒப்பந்தங்கள், 03 கொள்வணவுகள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

  - விசேட அதிரடிப்படைக்குரியதான பெறுகைகள் தொடர்பாக அமைச்சரவை பெறுகைக் குழுக் கூட்டங்கள் 03 தடவை நடாத்தப்பட்டுள்ளதோடு இதன்போது 06 கட்டுமான ஒப்பந்தங்கள், 16 கொள்வணவுகள் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **திணைக்கள பெறுகைக்குழு பரிந்துரைகளுக்கான அனுமதிகள்**

  - பொலிஸ் திணைக்களத்திற்குரியதான திணைக்கள பெறுகைக்குழு பரிந்துரைகளை பெறுகை வழிகாட்டல் கோவையின் (இணைப்பு இலக்கம் 28) அடிப்படையில் பெறுகை விடயங்கள் 263இற்கான அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **பெறுகை விலைமனுக்களைத் திறத்தல்**

  - 2015ஆம் வருடத்தினுள் 06 விலைமனு திறத்தல் (பார்வையிடல்) மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுள் 02 விலைமனுக்கள் பொலிஸ் திணைக்களத்திற்குஉரியதான கட்டுமானங்கள் என்பதோடு 04 விலைமனுக்கள் விசேட அதிரடிப்படைக்கும் உரியதான கொள்வணவுப் பெறுகைகள் ஆகும்.

- **பெறுகை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்**


  - பெறுகைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் 2015ஆம் வருடத்தினுள் 06 பெறுகை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.


- **பெறுகைகளுக்குறியதான கடன்வசதி கடிதங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்**

  - பெறுகைகளுக்குரியதான 2015ஆம் வருடத்தினுள் கடன்வசதி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்களின் போது அதற்கென அமைச்சரவையினால் வெளியிடப்பட வேண்டிய பரிந்துரைக் கடிதங்கள் 18 பொலிஸ் திணைக்களத்திற்கும் விசேட அதிரடிப்படைக்குமென வெளியிடப்பட்டுள்ளது.

## 3.4. திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரிவு

- 2015ஆம் வருடத்திற்கான அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தலும் 2016ஆம் வருடத்திற்கான தற்காலிக செயற்பாட்டு திட்டத்தை தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தலும்.




*தயாரிக்கப்பட்ட செயற்பாடு*

- பொலிஸ் திணைக்களத்தினதும் விசேட அதிரடிப்படையினதும் பௌதீக அபிவிருத்தியின் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 16 கருத்திட்ட யோசனைகளை மதிப்பாய்விற்கு உட்படுத்தி அக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான பரிந்துரைகளை பாதிட்டு திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.

- அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டிய அபிவிருத்தி கருத்திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்த அவசியமான 10 அமைச்சரவை பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு கௌரவ அமைச்சரின் கையொப்பத்துடன் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தலும் உரிய அனுமதியின் பின்னர் அக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களிடம் ஒப்படைத்தலும் கருத்திட்டங்கள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.


- அமைச்சரவையினதும் அமைச்சரவையின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் மாதாந்த மற்றும் தவணை முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்து ஜனாதிபதி செயலகத்திற்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல்.

- அமைச்சரவையினதும் அமைச்சரவையின் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் வருடாந்த செயற்பாடுகள், திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதும், மாற்றங்கள் இருப்பின் அதற்கான காரணங்கள், பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பாகவும், விசாரணைகள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் பொருட்டு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஐந்து (5) வருடத்தில் நடாத்துதலும் அதற்குரியதான பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.




*முன்னேற்ற மீளாய்வுக் கூட்ட சந்தர்ப்பங்கள்*

- அரச நிதித் சுற்று நிருப இலக்கம் 402 இன் படி தயாரிக்கப்பட்ட அமைச்சரவையின் 2014 ஆம் வருடத்திற்கான வருடாந்த வினைத்திறன் அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்காக முன்வைத்தலும் உரிய ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைத்தலும்




- பொலிஸ் திணைக்களத்தின் 2013 ஆம் வருடத்திற்கான வினைத்திறன் அறிக்கை, அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் 2013 ஆம் வருடத்திற்கான வினைத்திறன் அறிக்கை, நபர்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2013, 2014 ஆம் ஆண்டுகளின் வினைத்திறன் அறிக்கை கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் 2014 ஆம் வருடத்திற்கான வினைத்திறன் அறிக்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் 2014 ஆம் வருடத்திற்கான வினைத்திறன அறிக்கை ஆகிய வினைத்திறன்அறிக்கைகளை கௌரவ அமைச்சரின் கையொப்பம் மற்றும் விளக்கக் கடிதத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அவசியமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் 2016 பாதீட்டு ஒதுக்கீட்டு சட்டம் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட 2015-12-04 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் முன்னேற்ற அறிக்கை 2015 வெளியீட்டை தயாரித்து இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.




- இலங்கை மத்திய வங்கியின் 2014 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கைக்கு அவசியமாகும் தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல்

- சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான தகவல்களை தேவையான வகையில் சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சிற்கு பெற்றுக் கொடுத்தல்.

- சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினூடாக இணைக்கப்பட்ட மகளிர் மைய அதிகாரிகளின் ஒருங்கிணைப்பினூடாக பெண் வன்முறை தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சி ஒன்று சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சினதும் சிறுவர் மற்றும் மகளீர் அமைச்சினதும் அதிகாரிகளுக்காக நடாத்துதல்.

## 3.5. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

- 2015ஆம் வருடத்தில் அமைச்சின் பணியாளர் குழுவில் காணப்பட்ட பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடம் 2015.07.06ஆம் திகதி அதிகாரி ஒருவரின் வருகையுடன் தீர்க்கப்பட்டது.
- அமைச்சரவையினதும் அமைச்சரவையின் கீழ் இங்கும் நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகளின் மீளாய்வு நடவடிக்கைகள், கணக்காய்வு கேள்விகளுக்கு பதில் வழங்குவதன் முன்னேற்றம், வருடாந்த செயற்பாட்டு திட்டத்தின் முன்னேற்றம் உட்பட ஏனைய நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்குரியதாக சுற்று நிருபங்கள் மற்றும் சட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்துதல். மேற்பார்வை செய்தலும் மாற்றங்கள் தொடர்பில் அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் இரண்டை வருடத்தின் இறுதிக்காலாண்டு இரண்டினுள் முறையே 2015-08-11 மற்றும் 2015-12-21 ஆகிய திகதிகளில் நடத்தியமை.
- அமைச்சரவைக்கு கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கணக்காய்வு கேள்விகள் இரண்டிற்கு 2015 ஆம் வருடத்தினுள் பதில் அளித்து நிறைவு செய்தல்.
- பொலிஸ் திணைக்களத்திற்குரியதான கணக்காய்வு கேள்விகள் மற்றும் அரச நிதி செயற்குழுவின் புரிந்துரைகளுக்கு பதில் வழங்குதலை விரைவுபடுத்துவதற்கும், நிலையான சொத்துக்கள் அட்டவணை, வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளை முறையாக ஒழுங்குபடுத்துதலும், முற்பண பி கணக்கின் பற்றாக்குறை கடன் மிகுதியை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலை முறைப்படுத்துவதற்கும் அவசியமான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்
- ஆபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபைக்குரியதான கணக்காய்வு கேள்விகள் மற்றும் அரச நிதி செயற்குழுவின் பரிந்துரைகளுக்கு பதில் வழங்குதலை விரைவுபடுத்துவதற்கும், நிலையான சொத்துக்களை, அட்டவணை, வங்கிக் கணக்குகள் மற்றும் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளை முறையாக ஒழுங்குபடுத்துதலும்முற்பண பி கணக்கின் பற்றாக்குறை கடன் மிகுதியை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலை முறைப்படுத்துவதற்கும் அவசியமான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்
- விசேட அதிரடிப்படையின் நிலையான சொத்துக்கள் அட்டவணைகள் தயாரித்தல் வங்கிக் கணக்கு மற்றும் வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல், முற்பண பி கணக்கின் பற்றாக்குறை கடன் மிகுதியை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மென்பொருளைக் கையாண்டு செயற்படுத்தும் முறைமை தொடர்பாக வழகாட்டல்
- நிலையான சொத்துக்கள் அட்டவணைகள் பராமரித்தல், முற்பண கணக்கின் கடன் பற்றாக்குறையை அறவிட்டுக்கொள்ளலின் முன்னேற்றம், சேதங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக நபர்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்குதல், அதேவேளை கணக்காய்வு கேள்விகளுக்கு விரைவாக பதில் வழங்களின் அவசியத்தை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்திற்கு உறுதிப்படுத்தியதாக முறையான ஆலோசனை வழங்குதல்.

- நிறுவனத்தின் சொத்து மதிப்பீட்டு செயற்பாட்டை விரைவுபடுத்துதல் மற்றும் அனைத்து மதிப்பீட்டு மற்றும் சேதவிபர அறிக்கையை அமைச்சரவைக்கு பெற்றுக் கொண்டதன் பின்னர் அவை உரிய வகையில் இடம்பெறுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்தலும் அதற்குரியதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.